DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 11.06.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.29/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.4 |
| Name | : | அந்தோணி மைக்கேல் |
| Father Name | : | கதர்கொடி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 11.06.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(04.43.P.M):-**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். கடந்த 12.08.2024-ம் தேதி 13.00 மணிக்கு ஏற்காடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் என்பவர் நிலைய அலுவலலில் இருந்தபோது சேலம் ராமகிருஷ்ணா ரோட்டினை சேர்ந்த பத்மினி என்பவர் நிலையம் ஆஜராகி தனக்கு சொந்தமாக ஏற்காடு அத்தியூர் கிராமத்தில் 100 ஏக்கர் காப்பி எஸ்டேட் உள்ளதாகவும் அங்கு அவருக்கு சொந்தமாக ஒரு பங்களா உள்ளதாகவும் அவர் தினமும் எஸ்டேட்டிற்கு வந்து பார்வையிட்டு செல்வதாகவும், கடந்த

08.06.2024-ம் தேதி இரவு யாரோ மர்ம நபர் தனது எஸ்டேட் பங்களாவின் கதவினை உடைத்து பங்களாவிலிருந்து சமையல் பாத்திரங்கள், பூஜை பித்தளை சாமான்கள், பீங்கான் பொருட்களை கொண்ட ரூ.15,000/- மதிப்புள்ள பொருட்களை திருடி சென்றுவிட்டதாகவும் அது சம்மந்தமாக ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும், பின்னர் கடந்த 11.08.2024-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் அத்தியூர் மரப்பாலம் பகுதியை சேர்ந்த முருகன் என்பவர் மகன் தமிழரசன் தங்களது எஸ்டேட்டிற்குள் நுழைந்து எதையோ தேடிக்கொண்டிருந்தாகவும் அப்போது எஸ்டேட்டில் வேலை செய்து கொண்டிருந்த பட்டியல் சாட்சி 2, 3, 4 ஆகியோர் எதிரியிடம் விசாரணை செய்தபோது எதிரி தனது செல்போன் தொலைந்து விட்டதாகவும், அதை தேடிக்கொண்டு வந்ததாகவும், கூறியவரிடம் உனது போன் எப்படி எஸ்டேட்டிற்குள் வந்தது என்று கேட்டபோது அங்கிருந்து தப்பி ஓட முயன்ற எதிரியை பிடித்து பட்டியல் சாட்சி 2, 3, 4 ஆகியோர் விசாரித்தபோது எதிரியானவர் காலை சுமார் 11.00 மணியளவில் எஸ்டேட்டிற்குள் நுழைந்து மண்வெட்டி, கடப்பாறை, பாண்டு, அலுமினிய பாத்திரங்களை திருடிவிட்டு சென்றதாகவும், சொன்ன தகவலினை வாதிக்கு தெரியபடுத்தி வாதியானர் எஸ்டேட்டிற்கு வந்து எதிரியை விசாரித்துவிட்டு எதிரி திருடி அவரது வீட்டில் வைத்திருந்த காம்பு இல்லாத மண்வெட்டி 2, கடப்பாறை 4, இரும்பு பாண்டு 4, அலுமினிய பாத்திரம் பெரியது 1, அலுமினிய பாத்திரம் சிறியது 1, அலுமினிய கரண்டி 1, பிளாஸ்டிக் துண்டு பைப் 3 ஆகியவற்றை எதிரியின் வீட்டிலிருந்து

அவர் எடுத்து ஆஜர் செய்ததை பெற்றுக்கொண்டு எதிரியுடன் காவல் நிலையம் ஆஜராகி எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்து அளித்த எழுத்து மூலமான புகாரின் அடிப்படையில் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் நிலைய குற்ற எண்.158/2024, ச/பி. 303(2) BNS Act–ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் முதல் தகவல் அறிக்கை அசலுடன், புகாரினை எடுத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு 12.08.2024–ம் தேதியன்று 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜயன், ராஜி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகளிடம் பார்வை மகஜரில் கையெழுத்து வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் வழக்கின் சம்பவ இட புகைப்படம் ஆகும். **அந்த புகைப்படமானது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து சம்பவம் நடந்தது உண்மை என தெரியவருவதால் காவல் நிலையம் வந்து காவல் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த வழக்கின்

எதிரியான தமிழரசன் த/பெ. முருகன் என்பவரை கைதிற்கான காரணம் கூறி 17.15 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து கைது செய்தோம். பின்னர் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் தேவராஜ் (எ) ஆண்டி, அஜித்குமார் (எ) ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான "**என்னை கூட்டிச்சென்றால் நான் மூங்கில் குத்து எஸ்டேட்டில் xxxx இடத்தை அடையாளம் காட்டி xxxx விதத்தை நடித்து காட்டுகிறேன்"** ஒப்புதல் வாக்குமூலத்தின் அந்த **அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் இவ்வழக்கின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், இவ்வழக்கு சொத்தினை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது ச/பி. 303(2) BNS Act–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 05.03.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN
Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.06.11 17:20:34 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.